# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 144/12 — 1975 ජනවාරි 01 වැනි බදාදා — 1975.01.01

144/12 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு சனவரி மாதம் 01 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.அ.எண் : டபிள்யு. 68(46)/74.

**(40ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மேல் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

5

சனாதிபதியின் பவனம்,
கண்டி, 1975 சனவரி 1.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

ஒழுங்குவிதி

எழுத்திலான வேறெந்தச் சட்டத்திலும் எது எவ்விதமிருப்பினும், தம்புத்தேகம கிராமச்சபையினது அலுவல்களின் நிர்வாகம் 1975 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து, இந்த ஒழுங்குவிதி எவ்வளவு காலத்துக்கு வலுவிலிருக்கின்றதோ அவ்வளவு காலத்துக்கு மட்டும், அக்காலத்துக்கு மட்டுமே, எக்கநாயக்க முதியான்சிலாகே திஸ்ஸாநாயக்க அவர்களுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க, தம்புத்தேகம கிராமச்சபையினது அலுவல்களின் நிர்வாகம் உரித்தாக்கப்பட்டிருக்கும் சொல்லப்பட்ட எக்கநாயக்க முதியான்சிலாகே திஸ்ஸாநாயக்க அவர்கள், முற்கூறப்பட்டுள்ள காலத்தின்போது, கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதும் சட்டத்தின்கீழ் அக்கிராமச்சபையினதும் அதன் தவிசாளரினதும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

1–304 A


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.